## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 045 நாள் : 07.02.2023

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களில் 13.01.2023 முதல் 03.02.2023 வரை மேற்கொள்ளப்பட்ட களஆய்வுகளில் 1,813 சட்ட விரோத கழிவுநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு, ரூ.5,98,500/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் மழைநீர் வடிகால் துறையின் மூலம் மழைநீர் வடிகால்கள் தூர்வாரப்பட்டு, பழுதடைந்த மழைநீர் வடிகால்கள் புனரமைக்கப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்காக மட்டுமே அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால்களில் ஆங்காங்கே சட்ட விரோதமாக கழிவுநீர் இணைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மழைநீர் வடிகால்களில் மழைக்காலங்களில் மழைநீர் செல்வது தடைபட்டு நீர்த்தேக்கம் ஏற்படுகிறது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால்களில் சட்ட விரோதமாக கழிவுநீரை வெளியேற்றும் குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், 13.01.2023 முதல் 03.02.2023 வரை பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுகளில் 1,813 சட்ட விரோத கழிவுநீர் இணைப்புகள் கண்டறியப்பட்டு அவற்றின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு, ரூ.5,98,500/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**மண்டல வாரியாக கழிவுநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்ட விவரங்கள்**

| வ. எண் | மண்டலங்கள் | துண்டிக்கப்பட்ட கழிவுநீர் இணைப்புகளின் எண்ணிக்கை | அபராதம் (ரூ.) |
|---|---|---|---|
| 1. | திருவொற்றியூர் | 15 | 20,000 |
| 2. | மணலி | 49 | 6,000 |
| 3. | மாதவரம் | 124 | 10,000 |
| 4. | தண்டையார்பேட்டை | 195 | 27,500 |
| 5. | இராயபுரம் | 89 | 39,000 |
| 6. | திரு.வி.க.நகர் | 31 | 53,000 |
| 7. | அம்பத்தூர் | 166 | 1,41,000 |
| 8. | அண்ணாநகர் | 49 | 14,000 |
| 9. | தேனாம்பேட்டை | 336 | 55,000 |

| | | | |
|---|---|---|---|
| 10. | கோடம்பாக்கம் | 193 | 61,000 |
| 11. | வளசரவாக்கம் | 105 | 18,000 |
| 12. | ஆலந்தூர் | 84 | 34,000 |
| 13. | அடையாறு | 155 | 70,000 |
| 14. | பெருங்குடி | 181 | 40,000 |
| 15. | சோழிங்கநல்லூர் | 41 | 10,000 |
| **மொத்தம்** | | **1,813** | **5,98,500** |

எனவே, பொதுமக்கள் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்களில் கழிவுநீரை வெளியேற்றுவதை தவிர்க்க வேண்டும். மீறினால் கழிவுநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படும்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**